செ.வெ.எண் : 21/பிப்ரவரி நாள் : 13.02.2020

**இராமநாதபுரம் மாவட்டம்**
**மீனவர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள்**
**தலைமையில் நடைபெற்றது.**

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மீனவர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் இன்று (13.02.2020) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏறத்தாழ 237 கி.மீ நீளம் கடற்கரை உள்ளது. 180 மீனவ கிராமங்களும், 1,500-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளும் 4,500-க்கும் மேற்பட்ட நாட்டுப்படகுகளும் உள்ளன. மாவட்டத்தில், விவசாயத்திற்கு அடுத்தபடியாக மீன்பிடித்தொழில் பெரும்பகுதியான மக்களின் வாழ்வாதாரமாக இருந்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் இராமநாதபுரம் மாவட்டத்தில்தான் தமிழகத்திலேயே அதிகப்படியான மீன்பிடித்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு அரசு மீனவர்கள் நலனுக்காக எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. மீன்பிடி தடைக்காலங்களில் மீனவர்களுக்கு நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மீனவர்களின் பாதுகாப்பிற்காக மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு பயோமெட்ரிக் அடையாள அட்டை (Bio-Metric Id Card) வழங்குதல், அனுமதிச் சீட்டு (டோக்கன்) வழங்குதல் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் வழங்குதல் (Communication devices) போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, தூண்டில் என்ற செயலி வடிவமைக்கப்பட்டு மீனவர்களுக்கு தேவையான தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு மீனவ நலவாரிய சங்கத்தில் மீனவர்கள் அனைவரும் தங்களை பதிவு செய்திருத்தல் வேண்டும். மீனவப் பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திட கடற்பாசி வளர்ப்பினை ஊக்குவித்து வருகின்றோம். இத்தகைய வாழ்வாதார தொழிலை எதிர்கால சந்ததிகள் மற்றும் இளைஞர்கள் மேற்கொள்ள கண்டிப்பாக தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்த வேண்டாம். அவ்வாறு தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தும் மீனவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தேவையற்ற மற்றும் மீன்வளத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடிய கழிவுகளை கடலுக்குள் கொட்ட வேண்டாம் எனவும், மீன் பிடிப்பதற்கு அதிக திறன் கொண்ட இஞ்சின்களை பயன்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொண்டார். தொடர்ந்து, மீனவர்களது கோரிக்கையை கேட்டறிந்து அவர்களின் மனுக்களை பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அம்மனு மற்றும் கோரிக்கைகள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இக்கூட்டத்தில், இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர் என்.ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.ஆ.தங்கவேலு, மீன்வளத்துறை துணை இயக்குநர் திருமதி.எம்.வி.பிரபாவதி உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள், பல்வேறு மீனவர் சங்கங்களை சார்ந்த பிரதிநிதிகள், விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**